



ஈரோடு கிழக்கு, மேற்கு சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட மாநகர கழக இளைஞரணி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டத்தில் ஈரோடு தெற்கு மாவட்ட கழக செயலாளரும், வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சருமான சு. முத்துசாமி கலந்து கொண்டு ஆலோசனைகள் வழங்கி சிறப்புரையாற்றினார். நிகழ்வில் மாநில இளைஞரணி துணைச் செயலாளர்கள் ஜோயல், கே.இ.பிரகாஷ், ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார், சென்னை கிழக்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் பிரகாஷ், கே பி.சாமி, ஆ.செந்தில்குமார், க.சின்னையன், செல்லபொன்னி, பகுதி கழக செயலாளர்கள் வி.செல்வராஜ், வி.சி.நடராஜன், அக்னி டி.சந்திரசேகரன், வில்லரசம்பட்டி ஏ.முருகேசன், க.லட்சுமண குமார், தெற்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஜெ.திருவாசகம், மாநகர அமைப்பாளர் கே.டி.சேந்தபுகழன், துணை அமைப்பாளர்கள் பெ.சீனிவாசன், ப.ஜாகிர்உசேன், சசிக்குமார், பார்த்திபன், லெமன் நவீன், அன்பழகன், மாணவரணி என். ஸ்ரீதர், மணி சிவா உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### 61,521 பேர் வேலைவாய்ப்பு பெறும் வகையில் – ரூ. 31,592 கோடியில்

# 46 முதலீட்டுத் திட்டங்களுக்கு ஒப்புதல்!

## அமைச்சரவைக் கூட்ட முடிவுகள் குறித்து – அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா பேட்டி!



**சென்னை, பிப்.26–**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் 23.2.2026 அன்று தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற 24வது அமைச்சரவைக் கூட்டத்திற்குப் பிறகு, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா, செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி வருமாறு:–**

முதலமைச்சர் அவர்கள் தலைமையில் அமைச்சரவைக் கூட்டம் நடைபெற்றது.

தமிழ்நாட்டில் புதிதாக நிறுவப்படவுள்ள மற்றும் விரிவாக்கம் மேற்கொள்ளப்படவுள்ள 46 முதலீட்டுத் திட்டங்களுக்கு, ஊக்க சலுகைகள் வழங்க ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டங்களுக்காக ரூ. 31,592.39 கோடி முதலீடு மேற்கொள்ள உறுதியளிக்கப்பட்டுள்ளதுடன் 61,521 நபர்களுக்கு வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. இத்திட்டங்கள் மாநிலம் முழுவதும் பரவலாக சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர், விழுப்புரம், திருவண்ணாமலை, கிருஷ்ணகிரி, நாமக்கல், பெரம்பலூர், தேனி, திண்டுக்கல், கரூர், திருப்பூர், சேலம், கோயம்புத்தூர், தூத்துக்குடி உள்ளிட்ட மாவட்டங்களில் அமைக்கப்படவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இம்முதலீடுகளில் முக்கியத்துவம் வாய்ந்தவை Sakthi Aircraft Industry நிறுவனத்தின் பயிற்சி விமான உபபாகங்கள் இணைத்தல் மற்றும் பராமரிப்பு, NMB Minebea எனும் நிறுவனத்தின் பல்வகை செயல்பாடுகளுக்கான செமிகண்டக்டர் உற்பத்தி, Yield Engineering Systems உங்களுக்கு நன்றாக தெரியும். இந்த நிறுவனத்தின் செமிகண்டக்டர் உற்பத்திக்கான சாதனங்கள் தயாரிப்பு, Dixon குழுமத்தின் மின்னணுவியல் சாதனங்கள் உற்பத்தி, SFO Technologies நிறுவனத்தின் மின்னணு உபபாகங்கள் உற்பத்தி, Vikram Solar நிறுவனத்தின் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மின்கலன் சேமிப்பு அமைப்பு தொகுத்தல், Minerva (Battery Energy Storage System) Minerva Special Purpose Vehicle நிறுவனத்தின் கவச வாகனங்கள் உற்பத்தி;

Hikoki Power Tools மிகப்பெரிய நிறுவனத்தின் மின்னாற்றல் கருவிகள் உற்பத்தி, Festo நிறுவனத்தின் தொழில்துறை தானியக்க சாதனங்கள் உற்பத்தி, மிக முக்கியமான Akers குழுமத்தின் விமான இயந்திரம் மற்றும் Gear Box உபபாகங்களுக்கான உற்பத்தி. இது சிறப்பான ஒன்றாக அமையும். Snider Electric குழுமத்தின் குளிரூட்டப்பட்ட சாதனங்கள் உள்ளிட்ட உற்பத்தி, Bharat Biotech நிறுவனத்தின் உயிர் அறிவியல் தயாரிப்பதற்கான பூங்கா மிகப்பெரிய பிரமாண்டமான ஒரு அறிவிப்பு, மிகவும் முக்கியத்துமான ஒன்றாகவும், உடனடியாக செயல்படுத்தப்படும் என்பதற்கான அத்தாட்சி இது. Caterpillar குழுமத்தின் கட்டுமான இயந்திரங்கள் சாதனங்கள் உற்பத்தி, Boeing நிறுவனத்தின் மேம்பட்ட வான்வெளி ஆராய்ச்சி மேம்பாட்டு மையம்;

Saint Gobain நிறுவனத்தின் கண்ணாடி தயாரிப்புகள் உள்ளிட்ட பல முன்னணி நிறுவனங்கள் பல்வேறு துறைகளைச் சார்ந்த முதலீடுகள் இன்றைய அமைச்சரவையில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது என்பதை மிகுந்த பெருமையுடன், மகிழ்ச்சியுடன் திராவிட நாயகன் நமது முதலமைச்சர் அவர்களின் ஆட்சியில் தமிழ்நாட்டில் எப்படி அனைத்துப் பகுதிகளுக்கும் பரவலாக்கப்பட்ட வளர்ச்சி உறுதிசெய்யப்பட்டு அங்கிருக்கின்ற மக்களுக்கும், ஆங்காங்கே நமது படித்த இளைஞர்களுக்கு அங்கேயே வேலை வாய்ப்புகளை உருவாக்கும் வாய்ப்புகளை இந்த அமைச்சரவையின் மூலம் முதலமைச்சர் அவர்கள் உருவாக்கித் தந்துள்ளார்.

இவ்வாறு அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா தமது பேட்டியின் போது குறிப்பிட்டார்.



அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் சட்டமன்ற தொகுதி, ஆண்டிமடம் ஊராட்சி ஒன்றியம், வரதராஜன்பேட்டை பேரூராட்சியில், தென்னூர் – மாதவரம் வரையில் நீட்டிக்கப்பட்ட பேருந்து சேவையையும் மற்றும் விருத்தாச்சலம் – தென்னூர் வரை நீட்டிக்கப்பட்ட வழித்தடத்தில் மகளிர் விடியல் பயண பேருந்து சேவையையும் போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் கொடியசைத்து துவக்கி வைத்தார். உடன் ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன் மற்றும் பலர் உள்ளனர்.

### கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. தலைமையில் தமிழ்நாடு தலைகுனியாது பரப்புரை பொதுக்கூட்டம்!

# தமிழ்நாட்டின் நலனுக்கு எதிரான சக்திகளை மக்கள் நிராகரிப்பார்கள்!

## தயாநிதி மாறன் எம்.பி. பேச்சு!



நாமக்கல், பிப். 26 -

நாமக்கல் கிழக்கு மாவட்ட திமுக மற்றும் சேந்தமங்கலம் சட்டமன்றத் தொகுதி சார்பில் தமிழ்நாடு தலைகுனியாது பரப்புரை பொதுக்கூட்டம் சேந்தமங்கலம் தெப்பக்குளம் அருகில் நடைபெற்றது.

சேந்தமங்கலம் ஒன்றிய கழக செயலாளர் அ.அசோக் குமார் தலைமை தாங்கினார். சேந்தமங்கலம் பேரூர் கழக செயலாளர் என் தனபாலன் வரவேற்புரை ஆற்றினார்.

கூட்டத்தில் நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் பெ.இராமலிங்கம், மாநில இளைஞர் அணி துணை செயலாளர் சி.ஆனந்த குமார், பழங்குடியினர் நல வாரிய தலைவர் கனிமொழி காளியப்பன், மாவட்ட துணை செயலாளர் ராணி பெரியண்ணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் கழக நாடாளுமன்ற குழு துணைத் தலைவரும் கழக விளையாட்டு மேம்பாட்டு அணி செயலாளர் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினருமான தயாநிதி மாறன் பேசியதாவது :-

இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் இல்லாத போது தமிழ்நாட்டில் பெண்களுக்கு சொத்து உரிமை, கல்வி, சமூகநீதி உள்ளிட்ட பல முன்னோடியான சட்டங்கள் கொண்டு வரப்பட்டுள்ளதாகவும், இத்திட்டங்கள் மாநில வளர்ச்சிக்கு அடிப்படையாக உள்ளது. “பெண்கள் முன்னேற்ற மடைந்தால் தான் தமிழ்நாடு முன்னேறும்” என்ற கொள்கையை அரசு நடைமுறைப் படுத்தி வருகிறது.

முன்னாள் முதல்வர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் காலத்திலேயே பெண்களுக்கு சம உரிமை வழங்கும் சட்ட மாற்றங்கள் செய்யப்பட்டது .தற்போது அவரது வழியில் திராவிட மாடன் ஆட்சி முதலமைச்சர் மு க ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான அரசு, தமிழ்நாட்டின் வளர்ச்சி விகிதம், கல்வி முன்னேற்றம், மொழி பாதுகாப்பு ஆகிய துறைகளில் மாநிலம் முன்னிலை வகித்து வருகிறது.

தமிழ்மொழி பாதுகாப்பு குறித்து பேசுகையில், மொழியை காக்கும் பொறுப்பு ஒவ்வொருவருக்கும் உள்ளதாகவும், இந்தி மொழி ஆதிக்கத்தை தமிழ்நாட்டு மக்கள் ஒருபோதும் ஏற்கமாட்டார்கள். கல்வி, தொழில், அறிவியல் உள்ளிட்ட துறைகளில் தமிழ்நாடு முன்னேற்ற மாநிலமாக திகழ்வதற்கு காரணம் சமூகநீதி அடிப்படையிலான ஆட்சிதான், மத்திய அரசின் சில கொள்கைகள் தமிழ்நாட்டிற்கு பாதிப்பு ஏற்படுத்தும் என குற்றம் சாட்டினார்.. குறிப்பாக பாஜக தலைமையிலான அரசின் நடவடிக்கைகள் மாநில உரிமைகளுக்கு எதிரானவை.

அதேவேளை, எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி கே. பழனிசாமி, நரேந்திர மோடி, உள்துறை அமைச்சர் அமித்ஷா ஆகியோருக்கு அடிமையாக இருந்து வருகிறார். முன்னாள் முதல்வர் ஜெயலலிதா இருந்தபோது பா.ஜ.க.வுடன் கூட்டணி இனி வைக்க மாட்டேன் எனக் கூறி சபதம் எடுத்தார். ஆனால் எடப்பாடி பழனி சாமி மோடிக்கும, அமித்ஷா வுக்கும், இ டி ரைடுக்கும், பயந்து பா.ஜ.க.வுடன் கூட்டணி வைத்தது மட்டுமல்லாமல் அடிமையாகவே மாறி விட்டார்.

இந்தியை திணிக்க முயற்சிக்கிறார்கள். பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர், போன்றோர் எல்லாம் ஹிந்தி மொழிக்கு எதிராக போராட்டம் நடத்தி வெற்றி கண்டனர். தற்போது மீண்டும் இந்தி மொழியை கொண்டு வர முயற்சிக்கிறார்கள். இந்தி மொழி கொண்டு வந்த மாநிலங்களில் எல்லாம் அவர்களின் மொழி அழிந்துவிட்டது. தமிழ்நாட்டில் இந்தி மொழி கொண்டு வந்து தமிழ் மொழியை அழிக்க நினைக்கிறார்கள். கழகத் தலைவர் முதலமைச்சர் மு க ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் ஆட்சி இருக்கும் வரை ஒன்றிய பா.ஜ.க. அரசின் திட்டம் பலிக்காது.

இவ்வாறு அவர் பேசினார்.

கூட்டத்தில் நாமக்கல் கிழக்கு மாவட்ட கழக செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என். இராஜேஸ்குமார், சிறப்புரையாற்றினார். அப்போது அவர் பேசுகையில், முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான அரசு பெண்களுக்கு மகளிர் விடியல் பேருந்து பயணம், மகளிர் உரிமைத்தொகை, சுயஉதவி குழு கடன் தள்ளுபடி, அரசு பள்ளி மாணவர்களுக்கு காலை உணவுத் திட்டம் உள்ளிட்ட பல நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்.

அரசுப் பள்ளி மாணவர்களுக்கு 7.5% ஒதுக்கீடு மூலம் உயர்கல்வி வாய்ப்பு வழங்கி உள்ளார். தொடர்ந்து மத்திய அரசின் கொள்கைகள் மற்றும் எரிபொருள் விலை உயர்வை விமர்சித்த அவர், தமிழ்நாட்டு உரிமைகள் மற்றும் வேலைவாய்ப்புகளை பாதுகாக்கும் ஆட்சி தொடர வேண்டும் என்றார்.

கூட்டத்தில் ஒன்றிய கழக செயலாளர்கள் கே.பி. இராமசுவாமி, பி.பால சுப்பிர மணியன், எஸ்.செந்தில் முருகன், வி.கே.பழனி வேல், பெ.நவலடி, பேரூர் கழகச் செயலாளர்கள் அன்பழகன், டி.என்.முருகேசன், என்.செல்வராஜ், சி.பழனியாண்டி, தலைமை செயற்குழு உறுப்பினர்கள் டாக்டர் இரா.மாயவன் பொதுக்குழு உறுப்பினர்கள் சி.பூவர ராகவன் கு.காளியப்பன், விமலா சிவகுமார் மற்றும் சார்பு அணி நிர்வாகிகள், கழக நிர்வாகிகள் தொண்டர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இறுதியாக ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் வி.ராஜேஸ்வரன் நன்றி கூறினார். முன்னதாக கழக இன்னிசை குழு கிராமிய கலைமணி மோகனூர் செந்தில்குமார் கலைக்குழுவினர் வழங்கிய இளஞ்சூரியன் கழக இன்னிசை நிகழ்ச்சி நடைபெற்றது.

### சட்டமன்றத் தேர்தல் :

# 5வது நாளாக தி.மு.க. விருப்ப மனு விநியோகம்!

## சென்னை – அண்ணா அறிவாலயத்தில் ஏராளமான கழகத்தினர் குவிந்தனர்!









சென்னை, பிப். 26-

சட்டப் பேரவைத் தேர்தலில் தி.மு.க. சார்பில் போட்டியிடுபவர்களுக்கான விருப்ப மனு விநியோகம் சென்னை அண்ணா அறிவாலயத்தில் 20.2.2026 அன்று தொடங்கியது.

ஐந்தாவது நாளாக 24.2.2026 அன்று கழக நிர்வாகிகள், தொண்டர்கள் என ஏராளமானோர் ஆர்வமுடன் விருப்ப மனுக்களைப் பெற்றனர்.

தமிழ்நாடு சட்டப்பேரவை தேர்தல் ஏப்ரல் மாதத்தில் நடைபெற உள்ளது. இந்த தேர்தலில் தி.மு.க. தலைமையில் மெகா கூட்டணி அமைக்கப்பட்டுள்ளது. இந்த கூட்டணியில் புதிதாக தே.மு.தி.க. இடம் பெற்றுள்ளது. தொடர்ந்து கூட்டணி கட்சிகளுடன் தி.மு.க. தொகுதிப் பங்கீடு குறித்து அதிகாரப் பூர்வ பேச்சுவார்த்தையை தொடங்கி உள்ளது.

இந்த நிலையில் தி.மு.க. சார்பில் போட்டியிட விரும்புகிறவர்களிடம் இருந்து விருப்ப மனுக்கள் விநியோகம் சென்னை அண்ணா அறிவாலயத்தில் 20ஆம் தேதி அன்று தொடங்கியது.

24.2.2026 5வது நாளாக அண்ணா அறிவாலயத்தில் விருப்ப மனுக்களை தலைமை நிலையச் செயலாளர்கள் துறைமுகம் காஜா, பூச்சி முருகன் ஆகியோர் பெற்றனர். அப்போது கழகத்தினர் ஏராளமானோர் விருப்ப மனுக்களை அளித்தனர்.

தற்போது விருப்ப மனுக்களைப் பொறுத்தவரையில் 234 தொகுதி களுக்கும் பெறப்படுகிறது.

இதே போன்று, தமிழ்நாடு முழு வதும் பல்வேறு பகுதிகளில் இருந்தும் ஏராளமான தி.மு.க. நிர்வாகிகள், தொண்டர்கள் திரளாக வந்து திரண்டு விருப்ப மனுக்களை வாங்கிச் செல்கின்றனர். ஏராளமானோர் பூர்த்தி செய்த விருப்ப மனுக்களையும் தாக்கல் செய்தனர். விருப்ப மனு விநியோகம் வருகிற மார்ச் 2ஆம் தேதி வரை நடைபெறுகிறது.